**<u>வட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 119/2024**

**PW. 1**

**Date: 23.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.நாராயணன் | வயது | 66 |
| கணவர்/தந்தை பெயர் | வெங்கடாசாரி | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **23th March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரி ஆஜர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

4. நான் வங்கியில் மேலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிடும் இரண்டு வாகனங்களையும் நான் நேரில் சென்று பார்த்து வாங்குகிறேன் என்றால் நானும் எதிரியும் தான் சென்றோம். அந்த வாகனங்களின் பதிவு எண் நினைவு உள்ளதா என்றால் இல்லை. அதன் பதிவு எண். TN 10 BD 3314, TN 09 CX 2417 என்றால் நினைவு இல்லை. பணம் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். ரொக்கமாக கொடுத்தேனா என்றால் இல்லை. இணைய வழியில் தான் கொடுத்தேன். அந்த இரண்டு வண்டிகளுக்கும் என் பெயரில் பெயர் மாற்றம் செய்ய

வில்லை என்றால் எதிரி செய்து தருவதாக சொன்னார். நாளது தேதி வரையில் செய்து தரவில்லை. நான்தான் அந்த வண்டிகளை வாங்கி உள்ளேன் என்றாலும் எனவே விதிமுறையின் படி 30 நாட்களுக்குள் நான் தான் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று என் பெயரில் பெயர் மாற்றம் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

5. அந்த இரண்டு வண்டிகளில் TN 10 BD 3314 என்ற வாகனம் வாடகை பயன்பாட்டு வாகனம் என்றாலும் TN 09 CX 2417 என்ற வாகனம் சொந்த பயன்பாட்டு வாகனம் என்றால்சரிதான். அந்த இரண்டு வண்டிகளையும் வாங்கிய பிறகு நான் எதிரியுடன் உடன்படிக்கை ஏற்படுத்துகிறேன் என்றால் சரிதான். அந்த உடன்படிக்கை ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். TN 10 BD 3314 என்ற கார் கடந்த 15/08/2023 அன்று விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எதிரியிடம் தான் அந்த வண்டி உள்ளது. அந்த இரண்டு கார்களுக்கும் காப்பீடு உள்ளதா என்றால் தெரியாது. அந்த இரண்டு கார்களும் எனக்கு சொந்தமானது இல்லையா என்றால் நான் பணம் கொடுத்து விட்டேன். ஆனால் அவர் என் பெயருக்கு மாற்றி தரவில்லை. அந்த இரண்டு கார்களுக்குமான தொகையை நான் எதிரியிடம் கொடுக்கவில்லை என்றாலும் அருணகிரி டிராவல் ஏஜென்சி என்ற நிறுவனத்திற்கு தான் செல்கிறோம் என்றால் சரிதான்.

6. அந்த கார்களுக்கு காப்பீடு இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் அவை

புதுப்பித்தார் என்று எனக்கு தெரியவில்லை. எதிரி எனக்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தாரா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் கடன் பத்திரம் எதிரி எனக்கு எழுதி கொடுத்தது தான் என்றால் சரிதான். (**07/10/2023 தேதியிட்ட கடன் பத்திரம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தற்போது என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.1ல் எதிரி என்னிடம் ரூ.10,00,000/- ரொக்கமாக பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அவருக்கு ரூ.10,00,000/-ஐ ரொக்கமாக கொடுத்தேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வாடகை ஒப்பந்த பத்திரம் எதிரிக்கும் எனக்கும் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். (**10/06/2023 தேதியிட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

7. என்னிடம் காட்டட்பபடும் எ.சா.ஆ.2 TN 10 BD 3314 என்ற காருக்கு ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அந்த வாடகை ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் அதில் கண்டுள்ள நிபந்தனை படி FC, பர்மிட் மற்றும் காப்பீடு ஆகியவற்றை நான் தான் செய்து கொள்ள வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த உடன்படிக்கையை நாங்கள் ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு ரூபாய் இரண்டு லட்சம் தர வேண்டி இருந்தது என்றாலும் அதற்காக அவரது மனைவியின் காசோலையை என்னிடம் கொடுத்திருந்தார் என்றாலும் அந்த காசோலை பணமில்லாமல் திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

8. அந்த தொகையை அவர் ரொக்கமாக என்னிடம் செலுத்தி விட்டார் என்றால் சரிதான். அந்த தொகையை அவர் காலம் கடந்து தான் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி தனது மனைவியின் காசோலை திருப்பப்பட்ட பிறகு ஏற்பட்ட காலதாமதத்தில் அவரது காசோலையை என்னிடம் பிணையமாக கொடுத்திருந்தார் என்றாலும் ஆனால் அவர் வாங்கிய கடனை என்னிடம் திருப்பி செலுத்திய பிறகும் நான் அந்த காசோலையை அவரிடம் திருப்பிக் கொடுக்காமல் அதன் மூலமாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய இரண்டு வாகனங்களில் ஒன்று மட்டும்தான் வங்கி கடன் மூலமாக பெறப்பட்டது என்றாலும் மற்றொரு வாகனம் எவ்வாறு வாங்கினோம் என்றால் என்னுடைய உயர் அதிகாரி வளர்மதி என்பவர் தான் எனக்கு பணம் அனுப்பினார். நான் அந்த பணத்தை எதிரி குறிப்பிட்ட நபருக்கு அனுப்பி வைத்து தான் அந்த மற்றொரு வாகனத்தை வாங்கினேன்.

9. மதுரை, கண்ணன் ஏந்தல் என்ற பகுதியில் தான் வளர்மதி என்பவர் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வளர்மதி என்பவர் அந்த காரை வாங்குவதற்கு காரை விற்றவர் உடன் உடன்படிக்கை ஏதேனும் செய்து உள்ளாரா என்றால் செய்துள்ளார். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொண்டேனா என்றால் அந்த ஆவணம் அவரிடம் தான் உள்ளது. அதை நான் வாங்கி தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

**மேற்கண்ட ஆவணத்தை குறியீடு செய்வதற்காக எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**District Munsif cum Judicial Magistrate,**
**Thiruporur.**